இணைந்த சாரதிகள் சேவை **தரம் III** இங்கு ஆட்சேர்த்துக்கொள்வதற்கான விண்ணப்பம் கோரல்

1. கருத்திட்ட முகாமைத்துவ மற்றும் கண்காணிப்பு திணைக்களத்தில் சாரதிகள் சேவை தரம் III இல் காணப்படும் வெற்றிடங்களிற்கு ஆட்சேர்த்துக்கொள்வது தொடர்பாக முகாமைத்துவ சேவை சுற்றறிக்கை இல.03/2014 இன் கீழ் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் 2014.08.15 ம் திகதியிடப்பட்ட 1875/39 ம் இலக்க அனுமதிக்கமைவாக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை பெறுபேறுகளுக்கமைவாக திறன் அடிப்படையில் தகுதியுடைய விண்ணப்பதாரர் மட்டுமே வெற்றிடங்களை நிரப்புவதற்காக நியமிக்கப்படுவார்.

3. கருத்திட்ட முகாமைத்துவ மற்றும் கண்காணிப்பு திணைக்களத்தில் காணப்படும் வெற்றிட எண்ணிக்கை – 01 ஆகும். நியமனம் வழங்கும் அதிகாரியினால் நியமனம் வழங்கப்படும் திகதி தீர்மானிக்கப்படும்

4. சம்பள அளவுத்திட்டம்.- இல 03/2016 மற்றும் 2016.02.25 திகதியிடப்பட்ட அரச நிர்வாக சுற்றறிக்கைக்கு அமைய சாரதிகள் சேவை தரம் III இற்குறிய மாதாந்த சம்பள அளவுத்திட்டம் (PL3 -2016) ரூ. 25,790/= 10 x 270/- 10x300/- 12x 350/- ரூ.38,990/- ஆகும். ரூ.28,790/= ன் மேல் செல்வதற்கு தரம் II இற்கான பதவியுயர்வும் ரூ.31,820/- ன் மேல் செல்வதற்கு, தரம் I இற்கான பதவியுயர்வும் ரூ. 35,140/- ன் மேல் செல்வதற்கு விசேட தரத்திற்கான பதவியுயர்வுகளையும் பெற்றுக்கொள்ள முடியும். அச்சுற்றறிக்கையின் II வது இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள படி கொடுப்பனவுகள் வழங்கப்படும்

5. இப்பதவிக்குறிய ஓய்வூதிய முறை தொடர்பாக அரசாங்கத்தினால் எதிர்காலத்தில் எடுக்கப்படும் கொள்கைக்கமைவான தீர்மானத்திற்கு உத்தியோகத்தர் உடன்பட வேண்டும். முதல் நியமனம் வழங்கப்படும் சேவை நிலையத்தில் ஆகக்குறைந்தது 03 வருடங்கள் கட்டாயமாக சேவை புரிதல் வேண்டும். எப்படியாயினும் நியமன அதிகாரியினால் தீர்மானிக்கப்படும் விஷெட காரணங்களுக்கமைய அக்காலம் முடிவுறுவதற்கு முன் மாற்றம் செய்ய நியமன அதிகாரிக்கு அது தொடர்பாக அதிகாரம் உள்ளது.

6. தகைமை :

   6.1 கல்வித்தகைமைகள்.- கல்விப் பொதுத் தராதர (சாதாரண தர) சான்றிதழ் பரீட்சையில் இரண்டு தடவைக்கு மேற்படாத வகையில் சிங்கள/ தமிழ் மொழி உட்பட இரண்டு திறமைச்சித்தி அடங்கலாக ஆறு பாடங்களில் சித்திபெற்றிருத்தல் வேண்டும்.